## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.60/2021

DW2–சிநேகா நாள்.25.11.2024

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் சென்னையில் ஐ–போன் தயாரிக்கும் கம்பெனியில் வேலைபார்க்கிறேன். நான் Bsc–Textile and Fashion design படித்து இருக்கிறேன். இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியும். வழக்கின் வாதிகள் என் தம்பிகள் பாட்டியுடன் இருக்கிறார்கள். வழக்கு சொத்து எங்களுக்கு பூர்விக பாத்தியம். என்அப்பா சரவணகுமார் 05.08.2019 ல் இறந்தார். என்அப்பா நோய்வாய் பட்டு தான் இறந்தார். அதனால் எங்களுக்கு மருத்துவ செலவு அதிகமானது என்றால் சரிதான். குடும்பத்தில் அதிக கஷ்டம் வந்ததால் கடன் அதிகமானது என்றால் சரிதான். நாங்கள் வெளியில் கடன் வாங்கினோம். பூர்விக சொத்து வைத்து கடன் வாங்கினோம். யார் மூலமாக கடன் வாங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. 26.07.2024 கிரயம் கொடுத்தது எனக்கு தெரியாது. கடனுக்காக தான் பத்திர அலுவலகத்திற்கு போய் கையெழுத்து போட்டு கொடுத்தோம். தாவா சொத்தை நாங்கள் தான் விவசாயம் செய்கிறோம். கடனை கொடுக்க தயாராக இருக்கிறோம். கிரயமாக எழுதி கொடுத்தால் தான் கடன் கொடுப்போம் என்று சொன்னதால் தான் கிரய பத்திரத்தில் கையெழுத்து போட்டோம்.

**<u>2ம், 3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் என்அம்மா சாட்சி சொன்னது எனக்கு தெரியும். என்அம்மா நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்தது எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலமும், என் அம்மா தாக்கல் செய்துள்ள் நிருபண வாக்குமூலமும் ஒரேமாதிரியாக தான் உள்ளது என்றால் சரிதான். பத்தி எண் கூட ஒரே மாதிரியாக உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு எதற்காக போடப்பட்டது என்று எனக்கு தெரியும். அபிமன்யுக்கு 18 வயது நடக்கிறது. அவரது பிறந்த தேதி 10.01.2006. நான் என்னுடைய எதிர்வழக்குரையில் 1ம்

பிரதிவாதி தன்பிள்ளைகளுக்கு தற்போது கார்டியனாக இருந்து பிள்ளைகளை பராமரித்து வளர்த்து வருகிறார் என்று சொல்லியுள்ளது சரிதான். எதிர் வழக்குரையை என் தாயார் தாக்கல் செய்தார். அதில் உள்ள சங்கதிகளை தெரிந்து கொண்டு தான் நான் அதனை ஏற்றுக்கொண்டேன். என் பாட்டி பிள்ளைகளை பராமரித்து வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் அப்பா இறக்கும் போது எனக்கு வயது 19. என்அப்பா இறக்கும் போது எவ்வளவு சொத்து இருந்தது என்று எனக்கு தெரியாது. என்அப்பா சொத்தை குத்தகைக்கு தான் விட்டுஇருந்தார். யாருக்கு குத்தகைக்கு விட்டுஇருந்தார் என்று எனக்கு தெரியாது. என்அப்பாவுக்கு நிலத்தில் இருந்து போதிய வருமானம் கிடைத்ததா என்று எனக்கு தெரியாது. என்அப்பா இறக்கும் போது எவ்வளவு கடன் வைத்துவிட்டு இறந்தார் என்று எனக்கு தெரியாது. 3, 4 பிரதிவாதிகளை யார் என்று எனக்கு தெரியாது. நான் அவர்களிடம் பேசியதில்லை, பார்த்ததில்லை. அவர்களுக்கும் என்அம்மாவுக்கும் என்ன பேச்சுவார்த்தை நடந்தது என்று எனக்கு தெரியாது. சிங்காரவேலிடம் ரூ.5இலட்சம் காசோலை மூலமாக வாங்கியது தெரியுமா என்றால் எனது கணக்கில் ரூ.5இலட்சம் வடிவேல் என்பவர் மூலமாக தான் ஏறியது. வடிவேல் என்பவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. வடிவேல் மூலமாக தான் பணம் பெறபட்டது என்று எதிர்வழக்குரையில் சொல்லவில்லை. சர்வே எண்.274/2, 275/1எ ஆகிய சொத்துக்களை ரூ.6இலட்சத்திற்கு கிரயம் செய்தோம் என்றால் சர்வே எண் எனக்கு தெரியாது. ரூ.5இலட்சம் தான் எனது வங்கி கணக்கில் கொடுத்தார்கள். என்அம்மா பாப்பாத்தி என்பவரிடம் இருந்து ரூ.3,90,000/–ற்கு கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 கிரயத்திற்கு பிறகு தான் பாப்பாத்தியிடம் கிரயம் பெறப்பட்டது என்றால் சரிதான். ரூ.6இலட்சத்தை வரைவோலை மூலமாக பெறப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு இந்தியன் வங்கியில் கணக்கு உள்ளது. 27.07.2021 தேதியிட்ட ரூ.6இலட்சம் வரைவோலை என் கணக்கில் பெறப்படவில்லை. என்னுடைய வங்கி கணக்கின் Statementஐ தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். 3, 4 பதிலுரையை படித்து பார்த்தேன். பிரதிவாதிகள்

ரூ.6இலட்சம் வரைவோலை மூலமாக கொடுத்தது சொல்லியுள்ளதை தெரிந்துகொள்ளவில்லை. நான் தாக்கல் செய்த பதிலுரையில் நான் ரூ.6இலட்சத்தை வரைவோலை மூலமாக பெறவில்லை என்று சொல்லவில்லை. தற்போது நான் ரூ.6இலட்சம் பெறவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

**இல்லை**

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge,
Perambalur.